E.A.No. 2/2022 in E.P.No: 34/2019

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்.10.12.2024

ம.சா.1 – தங்கம்மாள் க/பெ –சுப்புராஜ்

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் விருதுநகர், பாரதி நகரில் குடியிருந்து வருகிறேன். எனது உடன் பிறந்த தம்பி கண்ணன் அவர்கள் எனக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்ததின் அடிப்படையில் நான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன். இம்மனு சொத்தில் நான் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன். நான் என் தம்பியிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்தின் சர்வே எண்.373. என் தம்பி கண்ணன் எப்போது கிரையம் பெற்றார் என்றால் 2020ம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார். நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். ஆங்கிலம் ஓரளவு படிக்க தெரியும். எனது தம்பி கண்ணன் கிரையம் பெற்ற ஆவணத்தை நான் படித்து பார்த்தேன், தற்போது ஞாபகமில்லை. அந்த கிரையம் ஆவணத்தில் வில்லங்க சான்று உள்ளதா என்றால் வில்லங்கம் எல்லாம் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் என்ன வில்லங்கம் உள்ளது என்பது எனது தம்பிக்கு தான் தெரியும், நான் அப்போது வெளியூரில் குடியிருந்தேன். அ.வ.எண்.47/11 என்ற வழக்கின் முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணை பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஊழியர்கள் காலி செய்ய சொன்ன போது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். அ.வ.எண்.47/11 வழக்கு சம்மந்தமாக எனது தம்பியிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால்

இல்லை. தாவா சொத்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருந்து கிரையம் பெற்றதாக எந்த அடிப்படையில் எனது மனுவிலும், வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் நாளிதழ் விளம்பரத்தை பார்த்து தெரிந்து கொண்டேன். அந்த நாளிதழ் விளம்பரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் தம்பி தான் அந்த விளம்பரத்தை பார்த்து வாங்கியதாக சொன்னார். தாவா வழக்கு தீர்ப்புகள் சம்மந்தமாக நான் என் தம்பியிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்று எனக்கு ஞாபகமில்லை. மனு சொத்தை தானமாக கொடுத்த எனது தம்பியை விசாரித்தால் அவர் யாரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றும், அதில் உள்ள வில்லங்கம் பற்றி தெரியவரும் என்று சொன்னால் அரசை நம்பி தான் வாங்கினோம். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பாரா 4 ல் சொல்லப்பட்ட ஆதியில் உண்மையான உரிமையாளர்கள் பிராது 3 வது அயிட்ட சொத்தில் கண்ட 1, 2 லக்க சொத்துக்கள் முழுவதும் வேல்முருகன், மைனர் செந்தில்வேலன், பரதன், உமாகாந்தன், தெட்சிணாமூர்த்தி ஆகியோர்களுக்கு மட்டுமே முழுமையாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொல்லியுள்ள விபரம் எந்த ஆவணத்தை பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் தம்பியை கேட்டு தெரிந்து கொண்டேன். மனு சொத்தின் பழைய செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரை நான் பார்க்கவில்லை. என் தம்பி அதை பார்த்தாரா என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை யார் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டது என்றால் நான் தான். ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆவணங்களை யாரிடம் இருந்து பெற்றேன் என்றால் என் தம்பியிடம் இருந்து பெற்றேன். ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள விபரம் எனக்கு தெரியாது. நிரூபண வாக்குமூலத்தில்

ம.சா.ஆ.1ஐ 09.11.1992 வேல்முருகன்(வ)வருவாய்துறை பதிவுகள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.1ல் வேல்முருகன் (வ) வருவாய்துறை பதிவுகள் என்று உள்ளதா என்றால் சரிதான். ஆனால் ம.சா.ஆ.1ல் உள்ள வருவாய்துறை சம்மந்தமாக வேல்முருகன் என்ற பதிவே இல்லை என்றால் 374 மற்றும் 373 ஆகிய சர்வே எண்களில் வேல்முருகன் என்று பதிவு உள்ளது, ஆனால் வேல்முருகனின் தகப்பனார் பெயர் முத்துநாடார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள தெட்சிணாமூர்த்தி, உமாநாதன், பரதன், வேல்முருகன் ஆகியோர்கள் எந்த சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் நாடார் சமூகத்தை சேர்ந்தவர்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள ம,சா.ஆ.2லும் மைனர்.செந்தில்வேலன், பாதுகாவலரும் தாயாரும் லலிதா, தெட்சிணாமூர்த்தி, வேல்முருகன், பரதன், உமாநாதன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலும் தகப்பனார் பெயர் முத்துநாடார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனு சொத்தின் உண்மையான உரிமையாளர் பரமன் என்பவர் பெயரில் உள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1, 2 ஆவணங்கள் சட்டப்படியான ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல. நான் உண்மையான உரிமையாளரிடம் மனு சொத்தை கிரையம் வாங்காததால் எனக்கு என் தம்பி தானமாக கொடுத்த ஆவணமும், எனது தம்பி வாரியத்திடம் இருந்து கிரையம் பெற்ற ஆவணமும் வாரியம் கையகப்படுத்திய நில ஆர்ஜித நடவடிக்கையும் சட்டவிரோதமானது என்பதால் நான் தனியாக வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் கோர வேண்டுமே தவிர இந்த நிறைவேற்றுதல் மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மனு சொத்தில் உரிமை பிரச்சனை இருப்பதால் விளம்புகை பரிகாரம் கோராமல்

விடுவிக்கக்கோரி பரிகாரம் கோரியுள்ளதால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.